1974 ஏப்ரல் 3] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

அந்த ஒரு மணி நேரத்தைக் குறைப்பதற்கு சட்டமன்றமே முடிவெடுத்தால்தான் செய்ய முடியும். தாங்களாகவே குறைப்பது விதிகளின்படி சரியல்ல என்பது என்னுடைய கருத்து. இன்னும் கொஞ்சம் நேரம் துணைக் கேள்விகளை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுக்கத்தான் பேரவையின் அனுமதி தேவையாக இருக்கிறது. கேள்வி நேரத்திற்குள்ளாகவே துணைக்கேள்வி இல்லையென்றால் கேள்வி நேரத்தை முடித்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. நான் எதற்காகச் சொன்னேனோ அதன் பயனைக் கெடுத்துவிடுகிறீர்கள். இங்கே உள்ளாட்சித்துறை பற்றிய மானியக்கோரிக்கை வர இருக்கிறது, அதில் பேசுவதற்கு நிறைய உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும், தவிர, ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம், உரிமைப் பிரச்னை ஆகியவை இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன்.

திரு. எம். சுரேந்திரன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். முக்கியமான கேள்வியாக இருப்பதால்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளையதினம் மானியக் கோரிக்கை வருவதால் அதில் பேசிக்கொள்ளலாம். அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள்,

3. உரிமைப் பிரச்சினை.

தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவறான தகவல் அளித்ததாக டாக்டர் எச். வி. ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை.

MR. SPEAKER: Dr. Hande has given the following notice:

"I do hereby give notice of the privilege motion against the Hon. the Education Minister for giving an incorrect statement on 26th March 1974 in reply to my call attention notice on the plight of S.I.E.T. College students. The Minister in his reply had stated that there was a delay in the release of III term funds for the college, because the college authorities refused to submit to audit by the Government Auditing. But in today's Hindu a statement has been released by the Correspondent of the College

that the statement made by the Hon. the Minister is at variance with facts and that no Government agency had asked the College authorities to submit itself to such an audit and the delay in the release of the funds is the entire fault of the Government.

"Hence, I request you to refer this matter to the Privilege Committee to enable the House to get the correct facts."

என்று உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி உரிமைப் பிரச்னையாகும் என்பதை மட்டும் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பியிருந்தேன். இன்றைக்குச் சொல்கிறேன் என்று சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடியட்டும், பிறகு நீங்கள் சொல்லலாம். நான் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்களுக்காக உறுப்பினர் விடுதியில் இருந்து விடப் படும் தனிப்பேருந்துகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படாதது குறித்து.

திரு. ஆ. பரந்தாமன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நாங்களெல்லாம் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயிருந்து தினந்தோறும் சட்ட மன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறோம். எங்களுக்கு வசதி செய்து தரும் வகையில் அரசாங்க பஸ்களை விட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு யாரோ ஒரு உறுப்பினர் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். நாங்கள் ஏறும் நேரத்தில் அதிகமான பொதுமக்கள் அதில் ஏறிவிடுகிறார்கள், அதனால் எங்களுக்கு வசதி யில்லை என்று சொன்னவுடன் இப்பொழுது பொதுமக்கள் அதில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதனால் அரசாங்க விடுதிகளில் நாங்கள் வரும் நேரத்தில் அங்கே வருகிற பொதுமக்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்து கிறார்கள். ஆகவே, 8 மணியிலிருந்து 9 மணி வரையிலும், பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரையிலும் மட்டும் எம்.எல்.ஏ.-க்களுக்கு